# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019

| தரம் : 08 | செயன்முறைத் தொழினுட்பத்திறன்கள் | நேரம் : |
| --- | --- | --- |
| | சுட்டெண் : ........................................ | 2.00 மணித்தியாலம் |

### பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. பயிர்ச் செய்கையின் போது "பீடைச் சேதம்" எனக் குறிப்பது
    1) பூச்சிகள் மற்றும் பூச்சி அல்லாத விலங்குகளினால் ஏற்படும் சேதம்.
    2) களைகளினால் ஏற்படும் சேதத்தை
    3) நோய்கள் ஏற்படுவதால் ஏற்படும் சேதத்தை
    4) மேற்கூறிய எல்லாவற்றாலும் ஏற்பட்ட சேதம்.

02. பாத்திகளுக்கு வைக்கோலால் மூடுபடை இட்டு பயிர் செய்வதன் நோக்கமானது
    1) நீர்ப் பாசனத்திற்கான போதிய அளவு நீரின்மை.
    2) பயிர்ச் செய்கைக்கான இடப்பற்றாக்குறை.
    3) நிலத்திற்குப் போதிய அளவு சூரிய ஒளி இன்மை.
    4) களிமண் உள்ள நிலத்தில் பயிர் செய்யும் போது.

03. எமது உடல் நிறையின் எத்தனை வீதம் நீர் உள்ளது?
    1) 30 - 40%  2) 60 - 80%
    3) 40 - 60%  4) 50 - 70%

04. சல்வீனியா, ஜப்பானிய ஐக்கோணியா என்பன
    1) மேட்டுநிலக் களைகளாகும்.
    2) நீர் நிலைகளில் காணப்படும் ஆக்கிரமிப்புக் களைகளாகும்.
    3) அலங்காரத் தாவரமாகும்.
    4) மேற்கூறிய யாவும்.

05. "திலாப்பியா" எனப்படுவது
    1) களைத் தாவரமாகும்.  2) பறவையினமாகும்.
    3) நீர் வாழ் மீன் இனம்.  4) ஆற்றுக்கழிமுகமாகும்.

06. உணவுப் பொருட்களை குளிரூட்டியில் குளிரூட்டல் மூலம் சில நாட்களுக்கு பழுதடையாது பேணப்படுகின்றது. இங்கு பயன்படுத்தப்படும் வெப்பநிலை வீச்சானது
    1) $8^0C$ - $10^0C$  2) $4^0C$ - $8^0C$
    3) $0^0C$ - $9^0C$  4) $^-18^0C$ - $^-10^0C$


07. உணவில் காணப்படும் கிருமிகளை அழிப்பதற்கு பயன்படும் கருவி உபகரணம்
    1) அமுக்கவடுகலன்  2) சோற்றடுப்பு
    3) கலக்கும் அரைக்கும் உபகரணம்.  4) குளிர்சாதனப்பெட்டி

08. அச்சாறு செய்யும் போது பயன்படுத்தப்படும் "நற்காப்பி" யாது?
    1) சோடியம் குளோரைட்டு  2) சோடியம் இருகாபனேற்று
    3) வினாகிரி  4) சித்திரிக்கமிலம்


kalvi.lk

09. உணவு நுகர்விற்குப் பொருத்தமற்ற நிலைக்கு மாற்றப்படுதல்
1) பதப்படுத்தல் எனப்படும்.
2) பழுதடைதல் எனப்படும்.
3) கிருமி அழித்தல் எனப்படும்.
4) உலர்த்தல் எனப்படும்.

10. உணவில் உள்ள எல்லா நுண்ணங்கிகளையும் "கிருமியழித்தல்" என்னும் செயன்முறை மூலம் அழிக்கப்படுகின்றது. இங்கு பயன்படுத்தப்படும் சிறப்பு வெப்பநிலையானது
1) $63^0C$
2) $100^0C$
3) $72^0C$
4) $121^0C$

11.  இக் குறியீடு ஆனது
1) ஒளிகாலும் இருவாயி
2) மாறும் தடையி
3) கொள்ளளவி
4) ஆளி

12. மின்சுற்று ஒன்றில் பாயும் மின்னோட்டத்தின் அளவை குறைப்பதற்கு பயன்படுத்தப்படும் துணைக் கூறானது
1) ஒளிகாலும் இருவாயி
2) கொள்ளளவி
3) தடையி
4) மின்மோட்டர்

13. இலத்திரனியல் துணைச் சாதனங்களை சுற்றுப்பலகையில் ஒருங்கு சேர்ப்பதற்கு பயன்படும் கருவி
1) வெட்டும் குறடு
2) மின் பற்றாசுக்கோல்
3) இருவாயி
4) அஞ்சலி

14. இலத்திரனியல் கருவிகளைப் பயன்படுத்திய பின்னர் சூழலில் போடுவதனால்
1) மண் சூழல் பாதிக்கப்படுகின்றது.
2) நீர்ச் சூழல் பாதிக்கப்படுகின்றது.
3) சிறுநீரக நோய் ஏற்படுகின்றது.
4) மேற்கூறிய யாவும் ஏற்படுகின்றது.

15. திரான்சிஸ்ரர் மூன்று முனைகளைக் கொண்டுள்ள இலத்திரனியல் கூறாகும். இதில் "B" என குறிக்கப்படும் முனை
1) காலி
2) அடி
3) சேகரிப்பான்
4) கலம்

16. உற்பத்தியாளரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் நுகர்வோரின் கைகளுக்கு மாற்றப்படும் செயன்முறை
1) மொத்த வியாபாரம்
2) இடைத்தரகர்
3) விநியோகம்
4) முகவர்

17. பொருள் ஒன்றின் சர்வதேச தர நியம நிறுவனத்தின் தரக்குறியீடு ஆனது
1) ISIS
2) ISO
3) IES
4) IIS

18. வழங்குநர்களினால் அனைத்துத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பம்
1) சந்தை
2) சந்தை ஆய்வு
3) சந்தை இடைவெளி
4) சந்தை பரிசீலனை

19. விளம்பரம் ஒன்றின் அடிப்படைக் கூறு அல்லாதது
1) அறிவுறுத்தல்
2) ஊக்கப்படுத்தல்
3) விற்பனையாளர்
4) நினைவூட்டல்

20. வணிகம் ஒன்றின் சமூகப் பொறுப்பாக குறிப்பிட முடியாதது
1) தனி இலாபநோக்கம் மாத்திரம்
2) சமூக அபிவிருத்தி
3) சூழல்நேய வணிகம்
4) நுகர்வோனின் நலனில் கவனம் செலுத்தல்.

( 20 × 1 = 20 புள்ளிகள்)


kalvi.lk

## பகுதி - II

முதலாம் வினா உட்பட, மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

**01.** *1)* செயன்முறை தொழினுட்பத்திறன்கள் பாடத்தில் உம்மால் செய்த செயற்பாடு ஒன்றைக் குறிப்பிடுக.

*2)* இச் செயற்பாட்டிற்குப் உமக்குத் தேவைப்பட்ட பொருட்கள், கருவி உபகரணங்களைக் குறிப்பிடுக.

*3)* இச் செயற்பாட்டின் மூலம் நீர் பெற்ற அனுபவங்களைத் தருக.

*4)* உம்மால் செய்யப்பட்ட செயற்பாட்டின் செயல் ஒழுங்கைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

**02.** *1)* கடனீரேரியின் முக்கியத்துவம் ஒன்று தருக.

*2)* இலங்கையில் உள்ள நீர்வீழ்ச்சிகள் 3 தருக.

*3)* இலங்கையில் இனம் காணப்பட்டுள்ள சதுப்புநிலங்கள் மூன்றையும் தருக.

*4)* நீர்முதல்கள் சார்ந்த கைத்தொழில்கள் 3 தருக.

( 1 + 3 + 3 + 3 = 10 புள்ளிகள்)

**03.** *1)* உணவு பழுதடையாது பேணப்படும் முறைகள் 3 தருக.

*2)* கிருமி அழித்தலுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணம் யாது?

*3)* ஆழ்குளிரூட்டியில் பேணப்படும் உணவுப் பொருட்கள் 2 தருக.

*4)* நொதித்தல் மூலம் பாதுகாக்கப்படும் உணவுகள் 3 தருக.

( 3 + 2 + 2 + 3 = 10 புள்ளிகள்)

**04.** *1)* சுற்றுக்களை ஒருங்கு சேர்க்கப் பயன்படும் பலகை வகைகள் 2 தருக.

*2)* இருவாயிகள் இரண்டினதும் பெயர்களைக் குறிப்பிடுக.

*3)* இருவாயியின் கதோட்டு முனையை எவ்வாறு இனம்காண்பீர்?

*4)* கொள்ளளவி, மாறும்தடையி, ஒளிகாலும் இருவாயி, ஆளி, மின்கலம் போன்றவற்றின் குறியீடுகள் வரைந்து காட்டுக.

( 2 + 2 + 1 + 5 = 10 புள்ளிகள்)

**05.** வணிகத்தில் விளம்பரம் முக்கியமானதாக உள்ளது.

*1)* விளம்பரம் என்பது யாது?

*2)* விளம்பரத்தின் அடிப்படைக்கூறுகள் எவை?

*3)* விளம்பரத்தினால் கிடைக்கும் நன்மைகள் 2 தருக.

*4)* விளம்பரம் செய்யும் ஊடகங்கள் 3 தருக.

( 2 + 3 + 2 + 3 = 10 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457